


தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நேற்று முன்தினம் (24.10.2024) சென்னை கலைவாணர் அரங்கக் கூட்டரங்கில் கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ப.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பெ.அன்புசோழன், (மக்கள் தொடர்பு) ச.செல்வராஜ், (செய்தி) மற்றும் செய்தித் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில், கூட்டுறவு மெகா பட்டாசுக் கடையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் 24.10.2024 அன்று திறந்து வைத்து, முதல் விற்பனையினை துவக்கி வைத்தார். உடன் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை மாநகரச் செயலாளர் ஆ.செந்தில், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ஜீவா, மாமன்ற உறுப்பினர் சுப. சரவணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### மாவட்ட ஆய்வுக் கூட்டங்களில்

# வங்கி அதிகாரிகள் தவறாமல் பங்கேற்க உத்தரவிடுவீர்!

## ஒன்றிய நிதி அமைச்சருக்கு – கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, அக்.26 -

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எழுதியுள்ள கடிதத்தில், மாவட்ட ஆய்வுக் கூட்டங்களில் வங்கி அதிகாரிகள் தவறாமல் கலந்து கொள்ள உத்தரவிடுங்கள் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், மாவட்ட வளர்ச்சி குழு உறுப்பினர்கள் பங்கேற்கும் மாவட்ட அளவிலான ஆய்வு கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வருகிறது. இதில் வழக்கமாக உள்ளாட்சி பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள்



முதலானவர்கள் அழைப்பின் பெயரில் கலந்து கொள்வர். அரசு திட்ட பணிகளுக்கான கடன்கள், உழவர் கடன்கள், கல்வி கடன்கள், மாவட்ட அளவில் புதிய வங்கி கிளைகள் துவங்குதல் போன்றவை ஆய்வு செய்யப்படும்.

பொதுவாக முன்னணி வங்கிகள் அனைவருக்கும் வசதியான நாட்களில் இத்தகைய கூட்டங்கள் நடப்பதற்கான முன்னெடுப்புகளைச் செய்யும். அரசு திட்டங்கள் மக்களைச் சென்று சேர்வதற்கான நடவடிக்கைகள் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.

சமீபத்தில் சென்னை மாவட்ட செயலாளர் தலைமையில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும் மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மற்றும் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். ஆனால் முன்னணி வங்கிகளான ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மற்றும் இந்தியன் வங்கியைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை.

இத்தகைய மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டங்களில், மாவட்டத்தில் உள்ள அரசு வங்கிகளின் செயல்பாடுகள், குறிப்பாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் அட்டை (கிரெடிட் கார்டு), வங்கி கடன் முதலானவை ஆய்வு செய்யப்படுவதால், இத்தகைய கூட்டங்களில் வங்கி அதிகாரிகள் பங்கேற்பது மிகவும் அவசியமாகும்.

எனவே, நிதி அமைச்சர் அவர்கள், இதுபோன்ற ஆய்வு கூட்டங்களில் சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரிகள் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என ஆணையிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. அவர்கள் கடிதத்தில் கூறியுள்ளார்.

மேலும், இக்கடிதத்தின் நகலை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், ஸ்டேட் பேங்க் தலைவர் செல் சீனிவாசலு செட்டி அவர்களுக்கும், இந்தியன் வங்கியின் மேலாண்மை இயக்குனர் சந்திலால் ஜெயின் அவர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.17.56 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், அக். 26 –

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், விளாங்குடி ஊராட்சி மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.17.56 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து, விளாங்குடி ஊராட்சி அண்ணா பல்கலைகழக உறுப்பு பொறியியல் கல்லூரிக்காக நெடுஞ்சாலை பிரிவில் ரூ.7.5 இலட்சம் மதிப்பீட்டில் நுழைவு வாயில் (Arch) அமையவுள்ள இடத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க அரியலூர் மாவட்டத்தில் கிராமங்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலைகள், குடிநீர் வசதிகள், பள்ளி வகுப்பறை கட்டடங்கள், வார சந்தைகள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக நேற்று அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட விளாங்குடி ஊராட்சி மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் ரூ.17.56 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை துவக்கி வைத்தார்.

அதன்படி விளாங்குடி ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.25.26 இலட்சம் மதிப்பீட்டில் விளாங்குடி பெரிய ஏரியில் 02 மதகுகள் அமைக்கும் பணிகளை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

தொடர்ந்து விளாங்குடி ஊராட்சி அண்ணா பல்கலைகழக உறுப்பு பொறியியல் கல்லூரிக்காக நெடுஞ்சாலை பிரிவில் ரூ.7.5 இலட்சம் மதிப்பீட்டில் நுழைவு வாயில் (Arch) அமையவுள்ள இடத்தினை பார்வையிட்டு, திட்ட வரைபடத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் ஜெயங்கொண்டம் நகராட்சி, செங்குந்தபுரத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.9.95 கோடி மதிப்பில் செங்குந்தபுரம் எம்.சி.சி மையம் அருகில் 3 MLD கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணியினையும். ஜெயங்கொண்டம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.3.45 கோடி மதிப்பில் வாரச் சந்தை கட்டும் பணியினை துவக்கி வைத்து பணிகளை உரிய காலத்திற்குள் தரமான கட்டுமான பொருட்களை கொண்டு விரைவாக முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, ஜெயங்கொண்டம் நகராட்சி, விருத்தாசலம் சாலை 7வது குறுக்கு சாலை கீழக் குடியிருப்பு பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.3.91 கோடி மதிப்பில் 5.856 கி.மீ நீளத்திற்கு தார் சாலைகள் அமைக்கும் பணியினை துவக்கி வைத்து பணிகளை தாமதமின்றி விரைவாகவும், தரமாகவும் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, கழக சட்டதிட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன், மாவட்ட துணைச் செயலாளர் மு. கணேசன், நகரக் கழகச் செயலாளர் வெ.கொ.கருணாநிதி,

நகர்மன்றத் தலைவர் சுமதி சிவக்குமார், நகராட்சி ஆணையர் அசோக்குமார், நகராட்சி பொறியாளர் ராஜகோபால், ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் சம்பத்குமார், ஒன்றியச் செயலாளர் இரா.மணிமாறன், ரெங்க.முருகன், ஆர். கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் செல்வராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.வசந்தபகலவன், நகர கழக நிர்வாகிகள் எஸ்.இராஜமாணிக்கம், மு.முரசொலிகுமார், பா.இரமேஷ், வீ.கொளஞ்சியப்பா, கு.பிரபாகரன், மா.செ.செந்தில்குமார், நிர்மலா செல்வம், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், வட்ட கழக நிர்வாகிகள் அப்பர், அம்பிகாபதி, இதயத்துல்லா, ம.விஜயன், ஆ.நடராஜன், ச.குமரவேல், செ.வெற்றி, க.சிவபாலன், ஆனந்த், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டத்தில் மகளிர் அணிக்கு உறுப்பினர் சேர்க்கப்பட்ட பூர்த்தி செய்த படிவத்தை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகனிடம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தீபா சத்தியேந்திரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சாந்தி ஆகியோர் ஒப்படைத்தனர். உடன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, மாநில மாணவரணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன், தலைமைக் கழக வழக்கறிஞர் எம்.தினேஷ்குமார், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, குத்தாலம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.ராஜா, அரசு வழக்கறிஞர் இராம.சேயோன், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.கே.மருது, துணை அமைப்பாளர்கள் விஜய், சௌ.சர்வோதயன் மற்றும் பலர் உள்ளனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை

# முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம்!

## உயர் கல்வித் துறை அமைச்சர் – முனைவர் கோவி.செழியன் தலைமையில் நடைபெற்றது!

தஞ்சாவூர், அக். 26 -

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 2024 வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைப் பணிகள் மேற்கொள்வது குறித்த ஆய்வுக் கூட்டம் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் 23.10.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை எதிர்கொள்வது தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வருவாய் கோட்ட அலுவலகங்கள் மற்றும் வட்ட அலுவலகங்கள் ஆகியவற்றில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் செயல்பட்டு 66 குழுக்கள் அமைக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது குறித்தும், பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் எனக் கண்டறியப்பட்ட பகுதிகளான வடவாற்றங்கரை மற்றும் கூடலூர் வெண்ணாற்றங்கரையில் கடந்த 13.10.2024 அன்று ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளான 195 பகுதிகளையும் பலப்படுத்திட தொடர்புடைய அனைத்துத் துறையினருக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளக் காலங்களில் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்திட ஏதுவாக 300 ஆப்தமித்ரா திட்ட தன்னார்வலர்கள், 4550 முதல்நிலை மீட்பாளர்கள், 409 நீச்சல் வீரர்கள், 38 பாம்பு பிடிப்பவர்கள், 160 மரம் வெட்டுபவர்கள், 147 கால்நடை பாதுகாப்பு முதல்நிலை பணியாளர்கள் ஆகியோர்கள் தயார்நிலையில் உள்ளது குறித்தும், வெள்ளக் காலங்களில் பயன்படுத்திட ஏதுவாக தேவையான அளவில் மருந்துப் பொருட்கள், ஆம்புலன்சுகள், மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவ பணியாளர்கள், பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு ஏதுவாக 251 நிவாரண முகாம்கள் அடிப்படை வசதிகளுடன் தயார் நிலையில் உள்ளது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

பேரிடர் காலங்களில் TNSMART Portalஇல் பதிவேற்றம் செய்துள்ளவாறு கனரக இயந்திரங்கள், தேவையான அளவில் மணல் மூட்டைகள், தண்ணீர் வெளியேற்றும் இயந்திரங்கள், தடுப்பு கம்புகள், தீயணைப்புத் துறை சார்பில் படகுகள், *inflatable rubber boats, life buoys, life jackets and rubber dinghies* போன்ற உபகரணங்கள் தயார்நிலையில் உள்ளது குறித்தும் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

அதேபோல் வடகிழக்கு பருவமழையின் போது மழைநீர் எளிதாக வெளியேறிட பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் (Bridges and Culverts), மழைநீர் வடிகால்கள் சுத்தம் செய்திடவும், தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்காதவாறு தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தொடர்புடைய துறையினர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் பொதுக் கட்டடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள், அங்கன்வாடிகள், தங்கும் விடுதிகள், பேருந்து நிலையங்கள், அலுவலகக் கட்டடங்கள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகள், பாலங்கள் மற்றும் மதகுகள் போன்ற முக்கியமான உள்கட்டமைப்புகளில் சேதமடைந்த மற்றும் பழுதடைந்த கட்டமைப்புகளை அடையாளம் கண்டறிந்து உடனடியாக அவற்றை பழுது நீக்கம் செய்திடவும், தேவையான நேர்வில் அப்புறப்படுத்திடவும் தொடர்புடைய துறையினருக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

தேவையான அளவில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குடிநீர் சேமித்து வைத்திடவும், வடகிழக்கு பருவமழையின் போது சேதமடையும் மின்கம்பங்களை அப்புறப்படுத்திடவும், புதிய மின்கம்பங்களை நட்டு மின்சாரம் தடையின்றி விநியோகம் செய்திட தேவையான உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறும், சாலையில் முறிந்து விழும் மரங்களை உடனுக்குடன் அப்புறப்படுத்திடவும் தொடர்புடைய துறையினருக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

அனைத்துத் துறை அலுவலகங்களிலும் மொட்டை மாடியிலுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றிடவும் அறிவுரை வழங்கப்பட்டது.

எனவே, அனைத்துத் துறை அலுவலர்களும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்.

முன்னதாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தீயணைப்புத் துறையினரால் வடகிழக்கு பருவமழையின் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைப் பணிகள் மேற்கொள்வது தொடர்பான செயல் விளக்கப் பயிற்சி (Mock Drill அனைத்துத் துறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் நடத்தப்பட்டதை கல்லூரி மாணக்கர்களுடன் உயர் கல்வித் துறை அமைச்சர் பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கா.அண்ணாதுரை, டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர் மு.பாலகணேஷ், கும்பகோணம் சார் ஆட்சியர் செல்வி.ஹிருத்யா எஸ்.விஜயன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர். உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர்கள் மரு. அஞ்சுகம் பூபதி, சுப.தமிழழகன், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் சு.க.முத்துசெல்வம், வருவாய் கோட்டாட்சியர்கள் இலக்கியா, ஜெயஸ்ரீ, மாவட்ட தீயணைப்பு அலுவலர் ச.குமார், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அண்ணல் தங்கோ
### அக்டோபர் 26 (2015)



இளம்வயதிலேயே திராவிடர் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

சைதை பகுதியில் வட்டச் செயலாளர் பொறுப்பேற்று அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.

நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**